அருள் தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாய்

www.thirukalyanamatha.com

மலர் : 4 இதழ் : 7 ஜூலை 2013 (தனிச்சுற்றுக்கு மட்டும்)



# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 ! 261230
kalyanamatha@gmail.com

ஆசிரியர் & வெளியிடுபவர்
அருட்திரு **பபியான் ஜோசப்**

ஆலோசகர் குழு
அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு
அருட் சகோதரி. மைக்கிள்
திருத்தொண்டர்.டேவிட் வளன்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230

தொடர்பு முகவரி
திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 ! 261230

## மலரின் உள்ளே...

| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| உலகத் திருச்சபை செய்திகள் | 2 |
| மறைமாவட்ட செய்திகள் | 3 |
| பங்குச் செய்திகள் | 4 |
| தாயின் மடியில் | 6 |
| கருணை மழையே.... | 11 |
| மார்ட்டின லூதர் கிங் | 19 |
| கார்மெல் மலை கன்னிமரி | 20 |
| குறைகளை நீக்கி நிறைவைத் தரும் திருக்கல்யாணத்தாய் | 22 |
| குட்டீஸ் கார்னர் | 23 |
| நற்கருணை புதுமை | 29 |
| குறுக்கெழுத்துப்போட்டி | 32 |

வாங்கிவிட்டீர்களா !


**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத்தாய் மாத இதழின் அன்பு வாசகர்கள் அனைவருக்கும் என் இனிய ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். “இதோ உம் தாய்” என நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவால் நமக்கு அளிக்கப்பட்ட கொடையே நம் திருக்கல்யாணத் தாய். கானாவூர் திருமண வீட்டிலே திராட்சை ரசம் குறைவு பட்டபோது அந்த குறையை நிறைவு செய்ய தன் மகனிடம் வேண்டி அதைப் பெற்று தந்தவர் நம் திருக்கல்யாணத்தாய் அதுபோல இன்றும் நம் வாழ்வின் குறைகள் தேவைகள் அனைத்தையும் எடுத்துக்கூறி நிறைவு செய்ய நம் திருக்கல்யாணத்தாய் என்னும் தனிச்சிறப்பு வாய்ந்த பெயருடன் பொற்பை நகரிலே வீற்றிருந்து புதுமைகள் செய்து வருகின்றார். குறிப்பாக, திருமணவரம், குழந்தை வரம் மற்றும் குடும்ப சமாதானம் வழங்கி வருகிறார்.

ஒவ்வொரு முதல் சனிக்கிழமைகளிலும் அன்னையை தேடிவரும் பக்தர்களின் கூட்டம் அதற்கு சாட்சியாக உள்ளது. அன்னையின் வழியாக பெற்றுக்கொண்ட நன்மைகளை எண்ணி நன்றி நிறைந்த உள்ளத்தோடு வரும் குடும்பங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகிறது. நாம் அனைவரும் திருக்கல்யாணத் தாயிடம் உறுதியான நம்பிக்கையோடு மன்றாடி வேண்டும் வரங்களைப் பெற்றுக் கொள்வோம். ‘‘அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்’’ என நம் திருக்கல்யாணத்தாய் கூறியபடி இறைவழி நடப்போம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

திருத்தல அதிபர்

பொத்தக்காலன்விளை.

# உலகத் திருச்சபை

# செய்திகள்



### பிறருக்கு சேவை செய்வதே உண்மையான அதிகாரம்!

உண்மையான அதிகாரம் என்பது பிறருக்கு பணி செய்வதேயன்றி அதிகாரப் போராட்டத்திற்கு திருச்சபையில் இடமே கிடையாது என்று திருத்தந்தை அவர்கள் கூறியுள்ளார்கள். திருச்சபையில் அதிகாரப் போராட்டம் புதிது அல்ல, உண்மையில் அது இயேசுவோடு தொடங்கியது என்றும், திருச்சபயில் அதிகாரப் போராட்டம் இருக்கவே கூடாது ஏனெனில் இயேசு தமது உவமைகளின் மூலம் நமக்குபோதித்ததுபோல உண்மையான அதிகாரம் பணி செய்யும் அதிகாரமே என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். ஒரு மனிதருக்கு ஒரு வேலை கொடுக்கப்படும் போது அது பதவி உயர்வு என்று பேசுவது இயற்கை. ஆனால் திருச்சபையில் அந்த உயர்வு குறித்து நாம் பேசக்கூடாது. ஏனெனில் இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டார். அவர் தாழ்த்தப்படுவதற்கு உயர்த்தப்பட்டார். இதுதான் உண்மையான உயர்வு என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

### செபத்தின் வழி புதுமைகள் இடம் பெறும்...


மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தன் மனைவியின் உடல் நலத்திற்காக கோவிலுக்கு இரவில் செபிக்கவந்த ஒருவர், கோவில் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு இரவு முழுவதும் வெளியிலே நின்று செபித்துவிட்டு காலையில் மருத்துவமனைக்குச் சென்றபோது, அவர் மனைவி, மருத்துவர்களுக்கு விளக்கம் சொல்லத் தெரியாத வகையில் அற்புதமாக குணமாகியிருந்தார் என்ற நிகழ்வைப் பற்றிக்குறிப்பிட்ட திருத்தந்தை செபங்கள் மூலம் இத்தகைய புதுமைகள் நடைபெறுகின்றன என்றும் விசுவாசத்துடன் நாம் தொடர்ந்து செபிக்கவேண்டும். அவ்வாறு செபிப்பதன் மூலம் பல புதுமைகள் நடைபெறும் என்பதை உறுதியாக நம்பவேண்டும் என்று திருத்தந்தை கூறியுள்ளார்.

### நன்மைசெய்பவரை தடுப்பது நமது பணியல்ல...!

நன்மை புரிவது என்ற கொள்கை, மதம் மற்றும் அனைத்து வேறுபட்ட கோட்பாடுகளையும் கடந்து செயல்படும் ஒரு கொள்கை என்றும், அதுவே மனித கலாச்சாரத்தில் அமைதிக்கு அடிப்படை என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். நன்மை புரிவது என்பது இறைவனின் சாயலில் படைக்கப்பட்டுள்ள அனைத்து மனிதருக்கும் அது ஒரு கடமை என்றும் கூறியுள்ளார்.

–நன்றி : நம்வாழ்வு

# மறை மாவட்ட செய்திகள்



1,2-06-13 ஆகிய இருநாட்களும் மேதகு ஆயர் அவர்கள் ஞானப்பிரகாசியார்பட்டினத்தில் பங்கு விசாரணை மேற்கொண்டார்கள். அன்று மாலை கத்தீட்ரல் ஆலயத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நற்கருணை பவனி நடைபெற்றது.

06-06-2013 அன்று மாலை கத்தீட்ரல் திரு இருதய ஆலயத்தில் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திருவிழா சிறப்பு மாலை ஆராதனை நடைபெற்றது.

07-06-2013 அன்று காலை கத்தீட்ரல் திரு இருதய ஆலயத் திருவிழா திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

08,09-06-2013 ஆகிய இருநாட்களும் மேதகு ஆயர் அவர்கள் லூர்தம்மாள்புரத்தில் பங்கு விசாரணை மேற்கொண்டார்கள்.

10-06-2013 அன்று காலை சிறுமலர் குருமடத்தில் திருப்பலியும் அன்று மாலை மங்களகிரி புனித ஜோசப் மெட்ரிகுலேன் உயர்நிலைப்பள்ளி புதிய கட்டட அர்ச்சிப்புத் திருப்பலியும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

15,16-06-2013 ஆகிய இருநாட்களும் ஏரல் ஒத்தாசை மாதா பங்கு விசாரணை மேதகு ஆயர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

20-06-2013 அன்று காலை மறைமாவட்ட கல்விக்குழு கூட்டமும் அன்று மாலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.


21-06-2013 அன்று காலை சிறுமலர் குருமட ஜூபிலி திருப்பலியும் அன்று மாலையில் மறைமாவட்ட நிதிகுழு கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

22,23-06-2013 ஆகிய இரு நாட்களும் சிங்கித்துறை பங்கு விசாரணை மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

29-06-2013 அன்று காலை ஆலந்தலை பங்கு பிளாட்டினம் ஜூபிலி திருப்பலியில் உறுதி பூசுதலும் அன்று மாலை மறைமாவட்ட நற்செய்தி நடுவத்தில் வைத்து நற்செய்தி குழுக்கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

30-06-2013 அன்று மாலை வீரபாண்டியன்பட்டினத்தில் அருட்திரு. ஜோசப் அடிகளார் குருத்துவ வெள்ளிவிழா திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நன்றி– **மறைமாவட்ட செய்திகள்**



# பங்குச் செய்திகள்

1.6.13 முதற்சனி வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றது.

2.6.13 தூத்துக்குடி பல்நோக்கு சமூக சேவை (TMSSS)சங்கம் வழங்கும் திட்டங்கள். 1. குடும்பநல பாதுகாப்புத் திட்டம், 2. குழந்தைகள் நல பாதுகாப்பு திட்டம், 3. கோல்ஃபிங் இயக்கம் (சிறுதொழில் கடன் உதவி), 4. மாற்றுத் திறனாளிகள் நலத்திட்டம். தகுதியானவர்கள் பங்குத்தந்தையை அணுகி இத்திட்டத்தில் சேர்ந்து உதவித் தொகை மற்றும் கடன் உதவி பெற்றுக்கொள்ளலாம். தூத்துக்குடி இன்னாசியார்புரத்தில் உள்ள இனிகோ தொழிற்பயிற்சிப் பள்ளியில் ஏழை, எளிய மாணவர்கள் நலன்கருதி அவர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சி கொடுத்து வேலைவாய்ப்பு வசதியும் செய்துகொடுக்கப்படுகிறது. தேவையானவர்கள் பங்குத் தந்தையை அணுகி விபரங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

நமது மறைமாவட்டத்தில் நமது ஆயர் அவர்களால் வழங்கப்படுகின்ற புனித சவேரியார் கல்விநிதி பெற தகுதியான ஏழை, எளிய மாணவ மாணவிகள் பங்குத் தந்தையை அணுகவும். ஒரு பங்கிற்கு மூன்று பேருக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்படும்.

10.6.13 அன்று நமது ஊரில் உள்ள அனைத்து பள்ளிகளும் கோடை விடுமுறைக்குப் பிறகு மீண்டும் தொடங்கப்பட்டது. மேலும் இந்த ஆண்டு முதல் மழலையர் பள்ளியும் நமது தொடக்கப்பள்ளியில் அருள்சகோதரியின் மேற்பார்வையில் தொடங்கப்பட்டுள்ளது. புதிய கல்வியாண்டின் தொடக்கமாக காலை 9.30 மணிக்கு மூன்று பள்ளி ஆசிரிய மாணவர்கள் இணைந்து தாளாளர் தந்தை அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்று மாலை நமது திருக்கல்யாணத்தாய் ஆலயத்தை திருத்தலமாக அறிவிக்க காரணமாக இருந்த நமது திருத்தல அதிபர் தந்தை அருள்திரு. பபியான் ஜோசப் அவர்களின் குருத்துவ வெள்ளிவிழா நன்றித் திருப்பலி தந்தையவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆலய மண்டபத்தில் வைத்து வெள்ளிவிழா நாயகருக்கு பாராட்டுக் கூட்டம் பங்கு மக்களால் நடத்தப்பட்டது. அதில் கடந்த கல்வியாண்டில் நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி 12ம்வகுப்பு அரசுத்தேர்வில் 100 சதவீத வெற்றியும் பத்தாம் வகுப்பில் 99 சதவீத வெற்றியும் பெற்றதை பாராட்டி தாளாளர் தந்தை அவர்கள் ஊரில் உள்ள மூன்று பள்ளிகளின் அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும் பொன்னாடை போர்த்தி பாராட்டினார்கள். மேலும் 12ம் வகுப்பில் முதல்மதிப்பெண் பெற்ற ஜெயக்கொடி, இரண்டாம் மதிப்பெண் பெற்ற சகாயடோனி ரூபன், 10ம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற ஸ்டெபி டாலியா, சகாய சன்மதி, இரண்டாம் மதிப்பெண் பெற்ற ஜெரின் மேரி ஆகியோரையும் பாராட்டி பரிசுகள் வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து மகிழ்ச்சியின் விருந்து நடைபெற்றது.

16.6.13 அன்று பொதுநிலையினர் பணியகத்தின் பொறுப்பாளர் தந்தையவர்கள் திருப்பலி நிறைவேற்றி பங்குப் பேரவை பற்றிய விளக்கத்தை கொடுத்தார்கள்.

# இறைபணியாளர்கள் குழு ஆய்வு

## பணி பங்கீடு + திறனாய்வு

அன்பியங்கள் பொறுப்பாளர்கள் :

| | | |
|---|---|---|
| அருட்சகோதரி. எக்பர்ட் | புனித செபஸ்தியார் அன்பியம் | 2வது வாரம் |
| | திருக்கல்யாணமாதா அன்பியம் | 3வது வாரம் |
| | அந்தோணியார் அன்பியம் | 4வது வாரம் |
| அருட்சகோதரி. மேரி | புனித லூர்துமாதா அன்பியம் | 2வது வாரம் |
| | குழந்தை இயேசு அன்பியம் | 3வது வாரம் |
| | உபகார மாதா அன்பியம் | 4வது வாரம் |
| அருட்சகோதரி கிரேசி | பிரகாசியம்மாள் அன்பியம் | 2 வது வாரம் |
| | அன்னை தெரசா அன்பியம் | 3வது வாரம் |
| | புனித சூசையப்பர் அன்பியம் | 4வது வாரம் |
| அருட்சகோதரி. மைக்கிள் | திருக்குடும்ப அன்பியம் | 2வது வாரம் |
| | திருஇருதய அன்பியம் | 3வது வாரம் |
| அருட்சகோதரர் டேவிட் | பவுல் அடியார் அன்பியம் | 4வது வாரம். |


★ இறைபணியாளர்களின் கூட்டம் 3 மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும்

★ அன்பிய பகுதிகளில், அந்த புனிதர்கள் திருவிழாக்களில் திருப்பலி நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டது.

## பக்த சபைகளின் பணி பகிர்வு

| | |
|---|---|
| 1. திருக்குடும்ப சபை | Fr. பபியான். Dn.டேவிட், Sr. எக்பர்ட் |
| 2. அமலோற்பவ மாதா சபை | Sr.மேரி |
| 3. மரியாயின் சேனையார் | Sr.எக்பர்ட் |
| 4. இயேசுவின் திருஇருதய நண்பர்கள் சபை | Sr.மிக்கேல் திரு. ஜெயசீலன் ஆசிரியர் |
| 5. நற்கருணை வீரர் சபை | Fr.பபியான் ஜோசப் |
| 6. தொன்போஸ்கோ இளைஞர் சபை | Dn.டேவிட் |
| 7. பாலர் சபைகள் | மெர்லின், இராஜேஸ்வரி ஆசிரியை |
| | Sr.கிரேஸ் மேற்பார்வை |
| 8. பீடப்பூக்கள் | Dn.டேவிட் |
| 9. வின்சென்ட் தே பவுல் சபை | Fr.பபியான் ஜோசப் |
| முதலூர் மறைக்கல்வி<br>மாலை 3.00–4.00 மணி + திருப்பலி | Sr.மேரி (பொறுப்பாளர்) Sr.கிரேஸ் |

– **பங்குத்தந்தை**



# தாயின் மடியில்

அன்று நமதாண்டவரின் தாயாகி இன்று மானிடர் அனைவருக்கும் தாயாக பொற்பை நகரில் சீரோடும் சிறப்போடும் திகழ்கின்றார் நம் திருக்கல்யாணத் தாய். தாய்மரி என்பவள் அணைத்துக் காப்பவள்; திருக்கல்யாணத்தாய் மானிடர் அனைவரையும் அரவணைத்துக் காப்பவர். விழிதிறந்த நாள்முதல் விழி மூடும் நாள்வரை உலகில் ஒவ்வொரு அணுவும் பேசுகின்றன. உதடுகள் உச்சரிக்கின்ற ஓர் உன்னத சொல் அம்மா அம்மா என்ற சொல்லுக்கு ஈடு இணை எதுவுமில்லை. அந்த தாயின் மடியில் தலை வைத்தால் துயரம் தெரிவதில்லை. வேதனையில், அச்சத்தில், இன்பத்தில் ஓர் ஆனந்த தாலாட்டு தாயின் மடிதான். ஆம்! தாயே நீயே தஞ்சமென்று தன் மடி நாடி பொற்பை நகர் தேடி ஓடி வரும் தன் அன்பு பிள்ளைகளை அரவணைத்து காக்கின்றார் திருக்கல்யாணத்தாய். நம் குற்றம் குறைகளை மன்னித்து நோய் நொடி தீர்த்து நம் நல்வாழ்விற்காக தன் மகனிடம் என்றும் பரிந்து பேசிடும் நம் கல்யாணத்தாய் அன்பிற்கு ஈடில்லை எதுவும்.

அன்பின் பிடியில்....

எல்லாத் தலைமுறையும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே – என்ற அன்னை மரியாளின் கூற்றானது, மரியன்னை மனித குலத்தின் மீது கொண்ட அன்பையும் தாகத்தையும் தொடர் உறவையும் நமக்குத் தெளிவாக காட்டுகிறது. மரியன்னை நம்மோடு பயணிக்கும் பாதுகாவலி! விடியற்காலத்தின் நட்சத்திரமாக நிலவில் நின்று நம்மை இரவில் பாதுகாப்பவர் மரியன்னை! விடியலின் சூரியனை கருத்தாக்கும் பெறும் பேற்றுடன் மாந்தர்கள் அச்சூரியனை அடைய வழிகாட்டியாகவும் திகழ்கிறார் நம் திருக்கல்யாணத் தாய்மரி.கானாவூர் கலியாணம் (யோ.2:1-12) மரியன்னை மனித குலத்தின் மீது கொண்ட அன்பை தெளிவாக காட்டுகிறது. அன்னை மரியாள் எலிசபெத்தை சந்தித்தது (லூக். 1:39-45) மனித குலத்தின் மீது கொண்ட தாகம், பிறருக்கு உதவவேண்டும் என்ற ஆர்வத்தைக் காட்டுகிறது. நமதாண்டவர் இயேசுவும் இதோ உம் தாய் (யோ. 19:27) என்று தன் தாயை மக்கள் அனைவருக்கும் வழிகாட்டியாக தந்துள்ளார். ஆம் அன்று சிலுவை அடியில் தன் மகன் தன்னிடம் ஒப்படைத்த தம் பிள்ளைகளின் கரம் பற்றிய திருக்கல்யாணத்தாய் மரியின் அன்புப்பிடி இன்றும் தளரவில்லை. அன்று கல்வாரி மலையில் தொடங்கிய உறவின் பாலம் இன்றும் தொடர்கின்றது.

– M.**மிக்கேல் உஷா,** பொற்பை

## அன்னை தெரசாவின் அன்பு மொழி



உன்னுடைய கண் அழகாய்
இருந்தால் பிறரைக் கவரலாம்...!
மாறாக உன்னுடைய
செயல்கள் அழகாய் இருந்தால்
பிறரால் கவரப்படுவாய்....!

– A.**மேரி ஷாலினி,** 9ம் வகுப்பு அ பிரிவு, பொற்பை

# நம்பிக்கை ஆண்டு

நம்பிக்கை ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த வருடத்தில், இரண்டாம் வத்திக்கான் சங்கம், திருச்சபையின் மறைக்கல்வி, நற்செய்தி அறிவிப்பு, விசுவாசத்தின் கதவு என்னும் திருமடல், பதிமூன்றாம் ஆயர், இவையனைத்தையும் நாம் விசுவாசத்தோடு இணைந்து பார்க்க வேண்டும்.

## நம்பிக்கை ஆண்டு என்றால் என்ன?

நம்பிக்கை என்பது நாம் எதிர் நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக்கு புலப்படாத இந்த விசுவாசம் திருமுழுக்கில் தொடங்கிய ஆயுள் காலத்துணை. அது இறைவனின் ஒரு கொடை. இந்த விசுவாசம் மனித வாழ்க்கை உயிருள்ளதாக வெளிப்படையானதாக செயலாற்றுவதாக அமைகிறது என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகிறது. இயேசுவின் வழியில் தம்மையே முழுமையாக தூய வாழ்வுக்கு உட்படுத்த அழைப்பதே இந்த நம்பிக்கை வாழ்வாகும். இந்த ஒரு சிறந்த விளக்கம் திருச்சபயின் மறைக்கல்வி கத்தோலிக்க நம்பிக்கையின் முழு உண்மைகளை விசுவாசிகள் தெளிவாகக் கண்டு கொள்ள எபிரேயர்11:1ல் கொடுக்கப்பட்டுள்ளது. என்பதை நாம் அறிவோம். இந்த நம்பிக்கையில் தான் நம் மூதாதையர் நற்சான்று பெற்றனர்.

## நம்பிக்கை ஆண்டின் முக்கிய நோக்கம் என்ன?

இந்த ஆண்டில் கிறிஸ்தவர்கள் அனைவரும் விசுவாசத்தை புதுப்பித்துக் கொள்ளவும், நற்செய்தி அறிவிப்பு பணியில் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றவும் வேண்டும் என்பதே இந்த நம்பிக்கை ஆண்டின் முக்கிய நோக்கமாகும். இயேசு கிறிஸ்துவை முழுமையாக அறிந்துகொண்டு அவரோடு நமக்குள்ள உறவைப் புதுப்பித்துக்கொள்ள கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு என்றும் அதுவே அவர்களின் விசுவாசக் கதவை திறந்துவிடுகிறது என்றும் நமது திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்கள். கிறிஸ்துவோடு உறவை புதுப்பித்துக் கொள்வது மாத்திரமன்றி அவரை அறிந்துள்ள நாம் அவரை அறியாத பிற மக்களுக்கு அவரது நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்பதே முக்கியமான நோக்கமாகும்.

## நம்பிக்கை ஏன் தேவை?

யோவான் 1:12– “அவர் மீது நம்பிக்கை வைத்து அவரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரையும் அவர் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையைக் கொடுக்கிறார்.” என்ற திருவசனத்தில் மிகத் தெள்ளத் தெளிவாக விளக்கப் பட்டுள்ளதை நாம் அனைவரும் அறிவோம். இதை சற்று ஆழ்ந்து தியானிப்போமானால் நம்பிக்கையின் தேவை நமக்கு தெளிவாக விளங்கும். ஆகவே கிறிஸ்தவ மக்களாகிய நாம் நமது நம்பிக்கையை முழுவதுமாக நம்மை படைத்த இறைவன் மீது வைக்க வேண்டும். மனிதர்கள் மீது வைப்பதால் எந்த பயனும் கிடைக்கப்போவதில்லை.

எனவே இந்த நம்பிக்கை ஆண்டில் நாம் அவர் மீது விசுவாசம் வைத்து கடவுளின் பிள்ளைகளாக மாறுவோம். அத்தோடு நின்றுவிடாமல் அவரது வார்த்தைகளை பிறருக்கு அதாவது கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அறிவிப்பதில் முழு மனதுடன் ஈடுபட்டு செயலாற்றுவோம். நம் வாழ்வில் நம்பிக்கை என்னும் கேடயத்தை எப்போதும் பிடித்துக்கொள்வோம்.

– **A.மரிய பாக்கிசீலி,** சங்கரன்குடியிருப்பு




# நன்றிகள் பலகோடிகள் 04.05.2013
# முதல்சனி உணவு
# நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| கென்னடி கலா, தூத்துக்குடி | 100.00 |
| அந்தோணி செல்வன் ரஜுலா, சாத்தை | 1000.00 |
| சந்தோஷ், பொற்பை | 500.00 |
| பீட்டர் ஸ்டெல்லா, சென்னை | 1000.00 |
| ஜெரோம் மெல், சென்னை | 500.00 |
| நந் தா தினேஷ் சேசுராஜா, கள்ளிகுளம் | 1000.00 |
| ரேணுகாதேவி பாலமுருகன், பொற்பை | 100.00 |
| சகாய ஜெரால்டு, மணப்பாடு | 200.00 |
| மார்ட்டின் துரை, கல்பாக்கம் | 1000.00 |
| கரோல் ஜோசப் வைதீபா, பூனா | 501.00 |
| ரோஸ் சேவியர், சென்னை | 2000.00 |
| சாந்தி கார்த்தீசன், வள்ளியூர் | 500.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1000.00 |
| குறிப்பிட்ட நபர், பொற்பை | 501.00 |
| ரெஜினாள் மேரி, பொற்பை | 100.00 |
| ராஜேந்திரன், பொற்பை | 50.00 |
| கண்ணன், கள்ளிகுளம் | 100.00 |
| ஜெயா, கண்டன்விளை | 200.00 |
| ரவீந்திரன், பாறசாலை | 200.00 |
| வின்சென்ட் ஜாண், கண்டன்விளை | 1000.00 |
| விசுவாசம், கோவில்பட்டி | 200.00 |
| அந்தோணி ராஜ், பொற்பை | 500.00 |
| டொனால்டு ராபின்சன், நாகர்கோவில் | 1000.00 |
| ஷைனி மினி, நீரோடி | 500.00 |
| முருகேசன், வடநரையன்குடியிருப்பு | 1000.00 |
| சகாய ஷோபனா விஜின், முருங்கைவிளை | 1000.00 |
| பதுவா டிராவல்ஸ், மணப்பாடு | 500.00 |
| பனியடிமை புஷ்பம், முட்டம் | 1900.00 |
| திவ்யா வினோத், பொற்பை | 2000.00 |
| சகாயம் குடும்பத்தார் | 500.00 |
| சந்தனராஜன், நந்தன்குளம் | 500.00 |
| சுரேஷ் பாண்டியன், பொற்பை | 200.00 |
| குணசேகரன், திருச்செந்தூர் | 100.00 |
| ஜஸ்டின் பிரபாகர், பொற்பை | 500.00 |
| அந்தோணி சூசை, மேலசாத்தான்குளம் | 500.00 |

| | |
|---|---|
| ஜோசப், மேலசாத்தான்குளம் | 1000.00 |
| சுதிருபியா, மணப்பாடு | 1000.00 |
| பரீனா சேவியர், வீரபாண்டியன்பட்டணம் | 500.00 |
| வினோத் லபோரா, ஆலந்தலை | 5000.00 |
| ஜோசப் கிரகோரி, ஆரல்வாய்மொழி | 500.00 |
| எட்வர்ட் லாரன்ஸ், பொற்பை | 200.00 |
| யூஜின் ஜோசப்குமார், ராமன்புதூர் | 500.00 |
| ஞானப்பிரகாசம், சின்ன பொற்பை | 500.00 |
| மொத்தம் | 31652.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| மேற்கியா மண்டப இறைமக்கள் | அரிசி 25 கிலோ |
| ஜோஸ் பிரகாசம், பொற்பை | அரிசி 50 கிலோ |
| பெலிக்ஸ் கணபதி, கோவை | அரிசி 25 கிலோ |
| அந்தோணிசாமி, வத்தலகுண்டு | அரிசி 50 கிலோ |
| சகாய சிமி, நாகர்கோவில் | பருப்பு 6 கிலோ உளுந்து 4 கிலோ |
| குறிப்பிட்ட நபர் | அரிசி 300 கிலோ |
| M.S.R. ஜஸ்டின் (சென்னை) | அரிசி 100 கிலோ |
| ராஜேஷ் அமலா, பொற்பை | அரிசி 50 கிலோ |
| சூசை மிக்கேல் (கோவை) | அரிசி 50 கிலோ |
| குறிப்பிட்ட நபர் | அரிசி 100 கிலோ |
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி, 50 கிலோ |
| ஜெரோம் குயின்றின், கவரப்பேட்டை | அரிசி 100 கிலோ |
| ஜோசப் செல்வராஜ், ஈரோடு | அரிசி 100 கிலோ |
| ரவீஸ்டர், பொற்பை | உருளை 4 மூடை, வெங்காயம் 4 மூடை, தக்காளி 12 பெட்டி<br>சி.வெங்காயம் 78 கிலோ<br>சேனைக்கிழங்கு 60கிலோ<br>கேரட் 87கிலோ, ப.மிளகாய் 58 கி.<br>மாங்காய் 10 கிலோ |
| மெர்லின் பிருந்தா, மார்த்தாண்டம் | அரிசி 25 கிலோ |
| சகாய ஷோபனா விஜின், முருங்கைவிளை | அரிசி 25 கிலோ |
| அனுசியா சாமுவேல், ஆசாரிபள்ளம் | அரிசி 25 கிலோ |
| | தேங்காய் 16 |
| நவமணி, மணவை | அரிசி 25 கிலோ |
| | தண்ணீர் பாக்கெட் 4 மூடை |
| இம்மானுவேல் ஜஸ்டின் தாமஸ். பொற்பை | அரிசி 25 கிலோ |
| குறிப்பிட்ட நபர், திரேஸ்புரம் | அரிசி 25 கிலோ |
| அல்போன்ஸ் சித்திரை தீபம், பொற்பை | அரிசி 25 கிலோ |

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (04.05.2013)

| | |
|---|---|
| யோவான் சமையல் | 13000.00 |
| பாஸ்கர் மளிகை | 67539.00 |
| ஜஸ்டின் மினரல் தண்ணீர் மூடை | 6837.00 |
| ஜேசு ஜெயராஜ் மற்றும் பணியாளர்கள் | 3500.00 |
| இம்மானுவேல் வண்டி வாடகை | 1625.00 |
| ஜெயக்குமார் வண்டி வாடகை | 1250.00 |
| பேச்சியம்மாள் தூய்மைப்பணி | 3500.00 |
| வின்செண்ட் உணவு விடுதி | 933.00 |
| இருதயராஜ் ரூபி ஸ்டோர் | 22500.00 |
| சென்னை பஸ் காய்கறி வாடகை | 700.00 |
| தூய மிக்காவேல் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| அந்தோணிராஜ் விறகு 32 எடை | 4320.00 |
| மொத்தம் | 126104.00 |

| | | |
|---|---|---|
| முன் இருப்பு வங்கியில் | - | 16466.00 |
| நன்கொடை வரவு | - | 31152.00 |
| திருத்தல பெருவிழா ஏல வரவு | - | 8035.00 |
| முதல் சனி மீதி பொருள் ஏல வரவு | | 16110.00 |
| பங்குத் தந்தைமூலம் வரவு | - | 70800.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | - | 3000.00 |
| கையில் | | 214.00 |
| மொத்தம் | - | 145777.00 |
| செலவு | - | 126104.00 |
| மொத்த இருப்பு | - | 19673.00 |

| | | |
|---|---|---|
| வங்கியில் | - | 19466.00 |
| கையில் | - | 207.00 |
| இறுதி மொத்த இருப்பு | - | 19673.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 30.04.13 அன்று இருப்பு | 271182.00 |
| 01.05.13 முதல் 31.05.13 வரை விற்பனை | 133104.00 |
| மொத்தம் | 404286.00 |
| 01.02.13 முதல் 28.02.13 வரை செலவு | 84202.00 |
| மொத்தம் | 320084.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

# கருணை மழையே...
# கல்யாணத் தாயே...



கருணை தெய்வம் இயேசுவின் தாய் நம் கல்யாணத்தாய். இறை வார்த்தையானவரின் தாய் என்பதும் அவரது திருவயிற்றில் இறைமகன் உருவெடுத்தார் என்பதும் படைப்பில் ஓர் அதிசயமான செயலாகும். தாயைப் போல பிள்ளை என்ற சொல்லுக் கேற்ப அன்றாடம் நம் மீது கருணையை மழையாகப் பொழிந்து கொண்டிருப்பவள்தான் நம் திருக்கல்யாணத்தாய்.

உலகத்தின் படைப்பின் அன்றே உலக மீட்பின் தாய் இறைத் திட்டத்தில் புதிய ஏவாளாக வேண்டுமென்று முன் குறிக்கப் பட்டிருந்தாள். மரியன்னை தூய வெண்மையான லீலி மலர். அவள் ஆண்டவரின் அடிமையாயிருந்ததால் திரியேக கடவுளுக்கு பணி செய்து வருகின்றாள். கிறிஸ்து தம் தாய் மீது கொண்டிருக்கும் உறுதியான அன்பினால் தான் அவளுடைய கருணை விழியிலிருந்து வருகின்ற ஆசீர்வாதங்கள் கிடைக்கப்பெற்று நம் வாழ்வில் மகிழ்வடைகிறோம். விடியற்காலத்தின் விடிவெள்ளியாக வீற்றிருந்து மானிட குலத்தின் மீது அருள் ஒளியை வீசிக் கொண்டிருப்பவள் தான் நானிலம் போற்றும் நாயகியான நம் திருக்கல்யாணத் தாய். பரமனை அடையும் பரலோக வாசலாக, நம் வாழ்வு ஏற்றம் பெற நம்மை ஏறெடுத்துப் பார்க்கும் அன்பான அன்னை. திருக்கல்யாத்தாயின் புகழ் அகிலமெங்கும் பரவியிருக்கும் இவ்வேளையில் நம் வாழ்வை வளம் பெறச் செய்யும் அன்னையின் சிந்தனைகளையும், இதன் மூலம் அன்னை நமக்கு கற்றுத் தரும் அறிவுரைகளையும் காண்போம்.

1. இறை நம்பிக்கை :

இறைவனிடம் நம்பிக்கை கொண்டுவாழும் மக்களுக்கும், அன்பு பணி செய்து வாழும் நல்லவர்களுக்கும் மற்றும் ஏழை எளியவர்களுக்கும் வாழ்வு என்று ஒன்று உண்டு. வளமான வாழ்வு அவர்களை வந்து சேரும். நம்பிக்கைக்கு ஏற்ற பலன் கிடைக்கும். நல் வாழ்வுக்கான இறைவனின் கைம்மாறு வந்துசேரும். இதைப் புரிந்துகொண்டு நாம் இறைவன் மீது கொண்டுள்ள நம்பிக்கையை விட்டுவிடாமல், பலவீனத்தில் விழுந்துவிடாமல் இறைவன் நம் பக்கம் இருக்கிறார் என்ற நம்பிக்கையோடும் வலிமையோடும் வாழ இறை நம்பிக்கையை நமக்குப் புகட்டுகிறார்.

2. இறை மகிமை :

லூக். 1:47 (ஆண்டவரை என் உள்ளம் ஏற்றி போற்றி மகிழ்கின்றது) அன்னை மரியாள் இறைவனின் அன்பைச் சுவைத்து இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் மகிழ்ச்சியாலும், இறைவன் மீது வைத்திருந்த அளவற்ற நம்பிக்கையின் வெளிப்பாடாக, ஆண்டவர் தனக்கு செய்த நன்மைகளை நினைத்து அவரை மாட்சிமைப் படுத்தவும், இன்னும் சொல்லப்போனால் இறைவனின் அன்பைச் சுவைத்து மகிழும் ஏழைகள், மற்றும் விசுவாசிகள் போல ஆண்டவர் மீது கொண்ட பக்தியின் அடையாளமாக ஜெபித்த விசுவாச ஜெபம். இறைவன் முழுமையானவர். முழுமையான அவரது அன்பை அன்னை மரியாள் பெற்றிருந்தாள். ஆதலால் முழு மனதுடன் அவர் பாடிய பாடல் விசுவாசப் பாடலாக அமைந்துள்ளது. மரியாவின் தாழ்நிலை, கீழ்ப்படிதல், நம்பிக்கை மற்றும் அர்ப்பண வாழ்வை இறைவன் உற்று நோக்குகிறார். அன்னை மரியா நம் எல்லோருக்கும் முன் மாதிரியாகத் திகழ்கிறார். இறைவனை நாமும் நம் அன்னையைப் போன்று மகிமை செய்ய வழிபாட்டில் மட்டுமல்ல, வாழ்வின் எல்லா நிலைகளிலும் அன்பு செய்து வாழவும், நன்றி சொல்லி வாழும் மக்களாக வாழ்வில் மகிழவும் மனநிறைவும் அடைய விசுவாசத்தில் அன்னையைப் போல் திளைப்போம்.

**– அன்னையின் அடிமை.**

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் ! 04639!261230 , 261330**

**04!05!2013 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | ! | 3011 பேர் |
| குழந்தைபாக்கியம் | ! | 2960 பேர் |
| சுகப்பிரசவம் | ! | 1997 பேர் |
| நற்சுகம்பெற | ! | 2560 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | ! | 2945 பேர் |
| தேவஅழைத்தல் | ! | 1896 பேர் |
| வேலைகிடைக்க | ! | 2563 பேர் |
| தொழில்முன்னேற்றம் | ! | 2373 பேர் |
| குடும்பசமாதானம் | ! | 3429 பேர் |
| குடும்பநலன் | ! | 2345 பேர் |
| உறவினர்நன்மைக்காக | ! | 1978 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | ! | 2944 பேர் |
| அலகைதொல்லைதீர | ! | 2714 பேர் |
| மனஅமைதிக்காக | ! | 3120பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | ! | 2904 பேர் |
| மனமாற்றமடைய | ! | 1947 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | ! | 2174 பேர் |
| நல்லஇல்லம்அமைய | ! | 1975 பேர் |
| சோதனைகளைவெல்ல | ! | 2107 பேர் |
| கடன்தொல்லைதீர | ! | 3203 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | ! | 1876 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும். !பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

## நன்றி! நன்றி!! நன்றி!!!

திருக்கல்யாணத்தாய் ஆலயத்தை திருத்தலமாக அறிவிப்பதற்கு காரணமாக இருந்த நமது திருத்தல அதிபர் தந்தை அருள்திரு. பபியான் ஜோசப் அவர்களுடைய குருத்துவ வெள்ளிவிழா நன்றித் திருப்பலியில் கலந்து கொண்டு தந்தைக்காக ஜெபித்தவர்களுக்கும், அதன்பின்பு ஆலய மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டுக்கூட்டத்தில் கலந்துகொண்டு வாழ்த்துரையும் சந்திப்பும் வழங்கி கலைநிகழ்ச்சி வழங்கியவர்களுக்கும், அதன்பின் நடைபெற்ற மகிழ்ச்சி விருந்தில் கலந்துகொண்டவர்களுக்கும், தகவல் தொடர்புகள் மூலம் வாழ்த்துக்கள் வழங்கியவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை சமர்ப்பித்துக் கொள்கிறோம். **– ஆசிரியர் குழு**



# பழுதற்ற கன்னியாயிருக்கிற மாதாவே!

நம்அன்னை கன்னிமரியாளை எடுத்துக் கொண்டால், அவள் கற்புக்கரசி, கற்பின் காவலி, பத்தரைமாற்றுத் தங்கமாய் பளபளத்து, இறைமகனைக் கருத்தாங்கினார். கன்னியர்கள் தாய்மார்களாக இருக்கமுடியாது. தாய்மார்கள் கன்னியரராக இருக்கமுடியாது. ஆனால் மரியா சூசையின் உறவின்றி கன்னியாக இருக்கிறார். இயேசுவை ஈன்றெடுத்ததால் தாயாகவும் இருக்கிறார். எனவே தான் மரியாவைக் கன்னித்தாய் என்கிறோம். பழுதற்ற கன்னியாய் இருக்கிற மாதாவே என்று கூறிப் புகழ்பாடுகிறோம். அன்னை மரியாவின் பழுதற்ற கன்னிமை, இயேசுவின் இறைத் தன்மைக்குக் கட்டிடத்தின் அடிக்கல் போன்று இருக்கிறது.

யூத மரபிலிருந்து உதித்த மரியாவை, ஒரு ஆணின் துணையின்றி குழந்தையைப் பெற்றெடுக்க, கபிரியேல் வானதூதர் வழியாக ஆண்டவர் அழைக்கிறார். இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண் மகனைப் பெற்றெடுப்பார் (மத். 1:22). அதற்கு மரியா வானதூதரிடம், இது எப்படி நிகழும் நான் கன்னி ஆயிற்றே என்றார். (லூக்.1:34)

மரியாவின் பழுதற்ற கன்னித் தன்மை, மரியாவின் முழு உடல் ஆளுமைத் தன்மையை மட்டும் சுட்டிக்காட்டவில்லை. மாறாக, மரியாவின் முழு ஒத்துழைப்பையும், இறைவனின் மீட்புத் திட்டத்திற்குத் தன்னையே முழுமையாக ஒப்புக்கொடுத்ததையும் காட்டுகிறது.

அன்னை மரியா இயேசுவின் பிறப்புக்கு முன்பாக பழுதற்ற கன்னியாக இருந்தார். இதை இலத்தீன் மொழியில் (ante Partum (Before birth)என்கிறோம். இயேசுவின் பிறப்பின் போதும் மரியா கன்னியாக இருக்கிறார். இதை இலத்தீனில் (In Partum (In the birth)என்கிறறோம். இயேசுவின் பிறப்பிற்குப் பின்பும் மரியா பழுதற்ற கன்னியாக இருக்கிறார். இதை இலத்தீனில் (Post Partum (After birth) என்கிறோம். ஆக மரியா எப்பொழுதும் பழுதற்ற கன்னியாகவே இருக்கிறார்.

இந்தப் பழுதற்ற கன்னிமை வழியாகப் பிறந்த இயேசு தூயவர். தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மீது நிழலிடும். ஆதலால் பிறக்கப்போகும் குழந்தை தூயது. (லூக். 1:35) தூய குழந்தையைப் பெற்றெடுத்த மரியும் தூயவர். லேவியர் நூல்அதிகாரம்12:1-8 வரை உள்ள வசனங்களில் கூறப்பட்டு இருப்பது போல தீட்டுப்பட்டவர் அல்லர் மாறாக மரியாள் தீட்டு இல்லாதவர். ஏனென்றால் இயேசு இரத்தத்தினாலோ, உடல் இச்சையினாலோ, ஆண்மகன் விருப்பத்தினாலோ பிறந்தவர் அல்லர் மாறாக கடவுளால், தூய ஆவியினால் பிறந்தவர்.

அன்னையைப் போல நாமும், தேவன் வாழும் நமது உடலை ஆலயமாக மதித்து, உடலிலும், உள்ளத்திலும் கற்பு நெறியோடு வாழ்ந்து இறைவனின் ஆசீரைப் பெறுவோமாக!

- நன்றி : **தாயே எங்கள் தஞ்சமே**




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

★ திருமணம் நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி.

– **லுக்மெல் பிரசன்சியா,** வீரபாண்டியன்பட்டணம்.

★ திருமண வரம் கிடைத்ததற்கு நன்றி. –**எட்வின் தாமஸ்,** மேரி அஜிதா, காம்பாடு

★ 10ம்வகுப்பு தேர்வில் வெற்றி கிட்டியதற்கு நன்றி. – **மேரி,** இராமன்துறை

★ திருமணம் நல்லமுறையில் நடந்தமைக்கு நன்றி – **ஜெனி நிார்,** பொற்பை

★ போட் கிடைத்ததற்கு நன்றி. – **பிராங்ளின்,** தூத்துக்குடி

★ குழந்தைபாக்கியம் கிடைத்தமைக்கு நன்றி. – **ஜஸ்டின் வெனிஸ்டா,** ராஜாவூர்

★ நினைத்த காரியம் நடந்ததற்கு நன்றி. – **மார்க்ரெட்,** முட்டம்.

★ கடல் வெள்ளத்திலிருந்து உயிர் பிழைத்ததற்கு நன்றி. – **சுரேஷ்,** புதுக்குறிச்சி

★ வேலை கிடைத்தமைக்கு நன்றி. – **ஆன்றனி,** புதுக்குறிச்சி

★ கண்பார்வை திரும்ப கிடைத்ததற்கு நன்றி. – **பெற்கொன்சியா,** புதுக்குறிச்சி

★ அன்னை செய்த அனைத்திற்கும் நன்றி. – **மிக்கேல்ராஜ், கிரிஜா,** கீழமணக்குடி

★ திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி.– **ஸ்டார்லக்,** மணப்பாடு.

★ நல்ல இல்லம் அமைந்ததற்கு நன்றி. – **இருதயராஜ் சுகிர்தா,** ஆலந்தலை

★ ஆரோக்கியமாக குழந்தை பிறந்ததற்கு நன்றி. – **மிர்சா,** மணப்பாடு.

★ 18–ம் ஆண்டு திருமண நாளுக்கு நன்றி. – **செல்வம் சோபியா,** புதுக்கோட்டை

★ கப்பலில் வேலை கிடைத்தமைக்கு நன்றி. – **மகேஷ்,** புன்னக்காயல்.

★ பி.எட் படிக்க இடம் கிடைத்ததற்கு நன்றி. – **ஆஸ்மிரோஸ்,** ராஜாக்கமங்கலதுறை

★ கேட்ட வரம் கிடைத்தமைக்கு நன்றி. – **செல்வன் கவிதா,** திருநெல்வேலி

★ அன்னை செய்த அனைத்திற்கும் நன்றி. – **நசரேத் ஜார்ஜ் மேரி,** முட்டம்

★ சுகப்பிரசவம் அமைந்ததற்கு நன்றி. – **திவ்யா அருண்வினோத்,** பொற்பை

★ குடும்ப நலன் கிடைத்தமைக்கு நன்றி. – **ஜோபின் கீதா,** புன்னக்காயல்

★ திருமணம் நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி. – **பீர்ட்ஸ் மீனா,** கன்னியாகுமரி.

★ மகள் கிளாடிஸ் அன்பரசிக்கு மகள் பிறந்ததற்கு அன்னைக்கு கோடானு கோடி நன்றி. – **பாக்கியசீலி,** சங்கரன்குடியிருப்பு.

★ புதிய இல்லம் அமைந்ததற்கு நன்றி. **அந்தோணிராஜ் அமலோற்பவமேரி,** பொற்பை

**– பங்குத்தந்தை**

# திருக்கல்யாணத் தாய் திருத்தல
# முதல்சனி வழிபாடு
## (1.6.2013)



திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில் ஜூன் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 01.06 2013 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**பெலிக்ஸ்** அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. **பிரிட்டோ** அடிகளார், அவர்கள் தலைமையில், பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு. **ராஜா,** அருட்திரு.**பீற்றர் ராஜா,** அருட்திரு. **பங்கிராஸ்,** அருட்திரு. **போஸ்கோ,** அருட்திரு.**கிராசியஸ்,** அருட்திரு. **ரத்னராஜ்,** அருட்திரு. **ரவி,** அருட்திரு. **ஆரோக்கியராஜ்** திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**பெலிக்ஸ்** அடிகளார், மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **110** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **11,000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதைத் திருத்தொண்டர் **டேவிட் வளன்** வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத்தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

**– திருத்தல அதிபர்**

# மே 2013 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** முன்னிருப்பு | | |
| வங்கியில் ரூ.340685.00 | | |
| கையில் ரூ.8591.00 | 349276.00 | |
| திருப்பலி 323X70, 49X70 | 26040.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை - 9765.00 | | |
| கிளை பங்குகள் - 765.00 | 10530.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 149175.00 | |
| பைன் மூலம் வரவு | 5000.00 | |
| நன்கொடை வரவு | 24000.00 | |
| புத்தக விற்பனை மூலம் | 1450.00 | |
| அடுப்புக்கரி விற்றது | 800.00 | |
| காணிக்கை + ஏல வரவு | 8737.00 | |
| வணக்க மாதம் வரவு | 18600.00 | |
| சான்றிதழ்கள் மூலம் (பெப். – மே 2013) | 500.00 | |
| பள்ளிகள் மூலம் | 10323.00 | |
| ஆலய வீடு வாடகை | 500.00 | |
| மண்டபம் + அறை வாடகை | 6650.00 | |
| திருமணம் (ஓலை750 திருமணம் 550X 7) | 4650.00 | |
| அடக்கம் & கல்லறை | 625.00 | |
| திருத்தல அறிவிப்பு வரிகள் மூலம் | 197500.00 | |
| முதற்சனி கடைகள் மூலம் | 4385.00 | |
| திருத்தல அறிவிப்பு கடைகள் மூலம் | 3630.00 | |
| மொத்தம் | 822371.00 | |
| **செலவுகள் :** | | |
| முதல்சனி குருக்கள் படி | | 6150.00 |
| நியூஸ் பேப்பர் | | 250.00 |
| முதற்சனி 10 பெரிய சில்வர் வாளிகள் | | 5555.00 |
| கோயில் இன்வர்ட்டர் & பேட்டரிகள் | | 55900.00 |
| டியூசன் டீச்சர் ஏப்ரல் பாக்கி | | 1720.00 |
| முதற்சனி உணவு வகைக்கு கொடுத்தது | | 74000.00 |
| மேக் டிவி விளம்பர வகைக்கு | | 4000.00 |
| திருத்தல மாதா கூண்டு செய்ய பொருட்கள் & கூலி | | 10349.00 |
| திருத்தல அறிவிப்பு சி.டி தயாரிக்க | | 11860.00 |

| | |
|---|---|
| அழைப்பிதழ் அனுப்ப தபால் செலவு | 1750.00 |
| பாடகர் குழு பென்டிரைவ் வாங்கியது | 320.00 |
| கல்வெட்டு | 5700.00 |
| கல்வெட்டு கொத்தனார் கூலி | 14450.00 |
| கல்வெட்டு பெயிண்டிங் பொருட்கள் கூலி | 3040.00 |
| திருத்தல அறிவிப்பு பேப்பர் விளம்பரம் | 25000.00 |
| திருத்தல அறிவிப்பு டி.வி விளம்பரம் | 4000.00 |
| திருத்தல அறிவிப்பு ஆயர் + குருக்கள் | 8500.00 |
| திருத்தல அறிவிப்பு இருவேளை சமையல் கூலி | 22000.00 |
| திருத்தல அறிவிப்பு வாணம் | 20000.00 |
| மண்டபம் ஜோடனை | 55000.00 |
| திருத்தல அறிவிப்பு தண்ணீர் + பழங்கள் | 1270.00 |
| குருக்கள் & கன்னியர்கள் சாப்பாடு | 10452.00 |
| சால்வை மற்றும் டவல்கள் | 1685.00 |
| நோட்டீஸ் ஒட்ட கூலி (ஜாண் மூலம்) | 20000.00 |
| நோட்டீஸ் ஒட்ட கூலி (துரை மூலம்) | 13780.00 |
| கொடி நட்டுதல் கூலி (அண்ணாமலை மூலம்) | 10600.00 |
| திருத்தல அறிவிப்பு மாலை + பூக்கள் | 5800.00 |
| தமிழ் + மலையாளம் நோட்டீஸ் & அழைப்பிதழ்கள் | 35500.00 |
| 3 டிஜிட்டல் போர்டு + கூலி | 9400.00 |
| பைபிள் டேக் & பாடல் புத்தகம் | 7050.00 |
| நோட்டீஸ் விளம்பரம் பெலிக்ஸ் மூலம் | 10000.00 |
| திருத்தல அறிவிப்பு சிறப்பு மலர் முன்பணம் | 20000.00 |
| பந்தல் துணிகட்ட முன்பணம் | 95000.00 |
| ஒலி, ஒளி அமைக்க முன்பணம் | 80000.00 |
| மின் கட்டணம் | 27070.00 |
| வள்ளியூர் பயணப்படி 4 பேர் (10 நாட்கள் முகாம்) | 1000.00 |
| பள்ளி டேங்க் எலக்ட்ரிக் வேலை பொருட்கள் + கூலி | 13490.00 |
| நம் வாழ்வு சந்தா | 315.00 |
| கூர்கா | 100.00 |
| டோபி | 300.00 |
| எரிவாயு | 450.00 |
| மும்முனை மின்சாரம் ஜேசுதாஸ் முன்பணம் | 7000.00 |


| | |
|---|---|
| தொலைபேசி கட்டணம் | 562.00 |
| அசன நன்கொடை | 1000.00 |
| மளிகை பொருட்கள் | 2223.00 |
| பால் & தண்ணீர் | 1895.00 |
| மட்டன் | 880.00 |
| ரேசன் பொருட்கள் & பழம் | 1550.00 |
| டிரக்கர் வாடகை | 550.00 |
| உதவித் தொகைகள் | 2200.00 |
| செக் போஸ்ட் | 245.00 |
| மருந்துகள் | 1131.00 |
| டீசல், பெட்ரோல் வாகனம் & ஜெனரேட்டர் | 7778.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| இரவுக்காவலர் ஊதியம் | 2500.00 |
| 2 துப்புரவு பணியாளர்கள் ஊதியம் | 7000.00 |
| அருட்சகோதரர் படி | 1000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை திருப்பலி படி | 1500.00 |
| புனித வரி | 19273.00 |
| திருப்பலி 393 5 = 1965.00 | |
| அடக்கம் 2 7 = 14.00 | |
| திருப்பலி 363 50 = 18150.00 | |
| **மொத்த செலவுகள்** | **764093.00** |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.822371.00 |
| மொத்த செலவு | ரூ. 764093.00 |
| இறுதியிருப்பு | ரூ. 58278.00 |

| | |
|---|---|
| வங்கியில் | ரூ. 51185.00 |
| கையில் | ரூ. 7093.00 |
| மொத்தம் | ரூ. 58278.00 |

**– பங்குத்தந்தை**

**உலகப் புகழ் பெற்றவர்கள் :**



# மார்டின் லூதர் கிங்

அநீதிகளை எதிர்த்துப் போராடுவதற்கு காந்திஜி காட்டிய வழியே சிறந்தது என்பதையுணர்ந்து அமெரிக்காவில் நிறவெறியை ஒழிப்பதற்கு அதைப் பயன்படுத்தியவர், அமெரிக்க நீக்ரோ மக்களின் தலைவரான மார்டின் லூதர் கிங். மதகுருவாக இருந்த இவர் அலபாமா மாநிலத்தில் பள்ளிக்கூடத்தில் கூட நிறவேற்றுமை கடைபிடிப்பதை எதிர்த்து சாத்வீக மறியலைத் தொடங்கினார். ஓராண்டு காலம் இதை இவர் தொடர்ந்து நடத்தியதால் உலகின் கவனத்தை வெகுவாக கவர்ந்தார். தென் மாநிலங்கள் எல்லாவற்றிலும் மறியல் போராட்டம் தொடர்ந்தது. அதன் காரணமாக 12 முறை கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். நிற வெறியர்கள் பலமுறை அவர்மீது வெடிகுண்டுகளை வீசினர். 1959 நியூயார்க் நகரில் ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு வரும் போது ஒரு பெண் கத்தியால் குத்தினாள். அதிர்ஷ்டவசமாக காயத்துடன் உயிர்தப்பினார். அவரது சாத்வீகப் போராட்டம் கறுப்பு இனத்தவருக்குப் பல உரிமைகளைப் பெற்றுத் தந்தது. 1964-ம் ஆண்டில் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றார். இப்பரிசை 35 வயதிலேயே பெற்றவர்இவர் ஒருவர் தான். நிறவெறியன் ஒருவனால் 4-4-1968ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

– நன்றி. **உலகப் புகழ் பெற்றவர்கள்**

# ஒரு வரி உண்மைகள்

**கங்காருவின் எடை 100 கிலோ வரை இருக்கும்**

**மாமிச பட்சிணிகளில் பெரியது கரடிதான்.**

**சில ஆந்தைகளுக்கு கொம்பு உண்டு.**

**குளிர்ப்பிரதேசங்களில் பல்லி இராது.**

**கழுகு ஒரு மாதம் கூடப் பட்டினியாக இருக்கும்.**

**முதலைகளுக்கு நிறபேதம் தெரியாது.**

**ஹிப்போவின் எடை நான்கு டன் வரை இருக்கும்.**

**யானை 4டன் எடையை தூக்க வல்லது.**

**கோலா கரடி நீர் அருந்துவது இல்லை.**

**நண்டின் பற்கள் அதன் வயிற்றில் இருக்கும்.**



– 'ஒருவரி உண்மைகள்' **S.சங்கரன்.**



# கார்மெல் மலை தூய கன்னிமரி

மரியன்னை கொடுத்த காட்சிகளும், விடுத்த தூதுரைகளும், தந்த எச்சரிக்கைகளும், மனிதரை விசுவாசத்தில் ஊக்கமடையச் செய்யவும், பாவத்தை விட்டொழிந்து செபத்திற்கும் தவத்திற்கும் அழைத்து மனிதரை ஈடேற்றத்தான். பிரான்சிலுள்ள லூர்து நகரில் பெர்னதெத்துக்கு 1858-ல் அன்னையின் காட்சிகள் கிடைக்கின்றன. அயர்லாந்தில் நாக் என்ற இடத்தில் 1879ல் நடந்த காட்சிகள், போர்ச்சுக்கல் நாட்டு பாத்திமாவில் 1916-ல் நடந்த காட்சிகள் எல்லாமே மனிதர் மீது கொண்ட அளவற்ற அன்பும், தம் பிள்ளைகளைக் காப்பாற்றி விண்ணகம் சேர்க்க வேண்டும் என்ற அக்கறையுடன் கூடிய துடிப்பும் தான் அன்னை மரியாளின் தோன்றலுக்கு காரணம் என புரிய முடிகிறது.

அதுபோலத்தான் கார்மேல் அன்னை என்று சொல்லுகின்றோமே இந்த அன்னையின் காட்சியும். எபிரேய மொழியில் கார்மல் என்ற சொல்லுக்கு தோட்டம் என்று தான் அர்த்தம். இந்த கார்மேல் பாலஸ்தீன நாட்டின் ஹைஃபா வளைகுடாவில் 1800 அடி உயரத்தில் இருக்கிறது. இந்த தோட்டத்தில் தான் பழைய ஏற்பாட்டில் வரும் இறைவாக்கினர் எலியா தங்கி ஜெபத்தில் நாட்களை செலவிட்டார் என்று சொல்லப்படுகிறது. (இவர் ஒரு சுழற்காற்றின்மூலம் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தோட்டத்தில் கன்னிமரிக்கு ஒரு சிற்றாலயம் எழுப்பப்பட்டிருந்தது. கி.பி. 1257ல் அங்கு கார்மெல் துறவற சபையின் தலைவராக இருந்த சைமன் ஸ்டாக் என்பவருக்கு மரியன்னையின் காட்சி கிடைத்தது. அந்நேரம் உத்தரியம் அணிந்து கொள்ளும் பக்தியை பரப்ப அன்னை பணித்தார்கள். இந்த பக்தியில் நீடிப்பவர்கள் விண்ணகத்திற்கு தவறாமல் செல்வர் என்று அன்னை உறுதியளித்ததாக வரலாறு தெரிவிக்கிறது. அங்குள்ள கார்மெல் சபைத் துறவிகளும், மக்களும் மரியன்னை மீது நம்பிக்கையும் ஆழ்ந்த பற்றும் கொண்டிருந்தார்கள். இதன் விளைவாக உத்தரியத்தை அணிந்துகொள்ளும் பக்தியை பரப்பிவருகின்றனர்.

திருச்சபை அங்கீகரித்துள்ள உத்தரியங்கள் சுரூபங்கள் ஆகியவற்றை நாம் அசட்டை செய்யாமல் அணிந்து கொண்டு, மற்றவர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டான வாழ்வு வாழ வேண்டும். ஏனென்றால் இதன் வழியாக இறைவன் தம் அருள் வரங்களையும், ஆசியையும் பொழிகின்றார்.

தூய கிளாட்தேலா கொலெம்பியர் சொல்கின்றார் : ஒருவன் தன் உத்தரியத்தை இழந்துவிடக்கூடும். ஆனால் சாகுந்தறுவாயில் அதை அணிந்து இருப்பவன் மீட்படைவான்.

நமது வீடுகளில் திருவிவிலியம், திருப்படங்கள், சுரூபங்கள், பாடுபட்ட சுரூபம், மந்திரித்த ஜெபமாலை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வைக்கும்போது அதனால் இறைபக்தியை தூண்டி, வளரும் தலைமுறையினரின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு பெரிதும் துணைபுரிய முடியும். இறைபக்தியில் வளரும் குழந்தைகள் தான் எதிர்கால திருச்சபையைத் தாங்கும் தூண்களாக மலர முடியும்.

**- பெலாஜியா மைக்கிள்.**

புனிதர்களின் சிறுகுறிப்பு :

# புனித சுவக்கீன் – புனித அன்னம்மாள்



சுவக்கீன் என்றால் ஆண்டவரது படைப்பு என்பது பொருள். அன்னா என்றால் இறைவனது அருள் என்று பொருள். அன்னம்மாள் பெத்லகேமில் பிறந்தார். நாசரேத்தில் வாழ்ந்த சுவக்கீன் என்பவரை மணந்தாள். இருவரும் தாவீது அரசரின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு நெடுங்காலமாக குழந்தை இல்லை. பிறகு தான் மரியாள் பிறந்தாள். மரியாளுக்கு 3 வது ஆனதும் தேவாலயத்திற்கு செல்லும்படி அவளைக் கடவுள் அழைத்தார். சுவக்கீனும், அன்னம்மாளும் தியாக குணம் படைத்தவர்கள். நெடுங்காலமாய் தவம் இருந்து, கடவுளிடம் மன்றாடிப் பெற்ற அழகிய குழந்தையை கடவுளுக்கு இவர்கள் அர்ப்பணம் செய்தார்கள்.

ஆதியிலிருந்தே புனித அன்னம்மாளை விசுவாசிகள் வந்தித்து வந்திருக்கிறார்கள். இவளுக்கு தோத்திரமாக கோவில்கள் கட்டப்பட்டன. கிழக்கத்திய திருச்சபையின் பிதாப் பிதாக்கள் அவளது பரிசுத்த தனத்தைப் பற்றியும் இவள் பெற்ற வரங்களைப் பற்றியும் அழகாக கூறியிருக்கிறார்கள். 4–ம் நூற்றாண்டில் புனித சுவக்கீனுக்குத் தோத்திரமாக யெருசலேமில் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது.

**சிந்தனை :** இவர்களைப் போல் கடவுளுக்காக நாம் நேசிக்கும் இடம், பொருள், ஆட்களை தியாகம் செய்வதற்கான தைரியத்தைக் கேட்டு மன்றாடுவோம்.

**செபம் :** ஆண்டவரே, தியாக மனப்பான்மையை எங்கள் அனைவருக்கும் தாரும்.

– **தூயவர்களின் வரலாறு**

# தேன் மதுரத் தமிழ்...

நம் தாய் மொழியாம் தமிழ்மொழியானது பைந்தமிழ், தீந்தமிழ், செந்தமிழ், வண்டமிழ் என பல அடைமொழிகளில் சிறப்பிக்கப்படுகிறது. இவற்றையும் கடந்து பாட்டுக்கொரு புலவன் பாரதி "தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் செழிக்கச் செய்வீர்" என்று பாடியுள்ளான்.

காரணம் என்ன? என நான் நினைத்தேன், சிந்தித்தேன், தமிழ்மொழியின் பல நூல்களை படித்தேன், படித்துணர்ந்தேன், அதன் இனிமையை சுவைத்தேன். இப்படி தேன் நிறைந்த எண்ணற்ற வார்த்தைகளை எழுதிக்கொண்டே போகலாம். தமிழ்மொழியிலுள்ள இறந்த கால வினைமுற்றுச் சொற்கள் அனைத்திலும் தேன் நிறைந்துள்ளது. எனவே தான் பாரதி தேமதுரத் தமிழ் என செப்பியுள்ளான் போலும்.

இத்தகைய இனிமை நிறைந்த நம் தாய்மொழியாம் தமிழ்மொழி வழியில் கல்வி கற்றலை விட்டு விட்டு நம்மவரில் சிலர் ஆங்கில மோகம் கொண்டு தமது பிள்ளைகளை ஆங்கில மொழி வழிக் கல்வி கற்க அவர்களை விட்டு தூரமான இடங்களுக்கு அனுப்புகிறார்கள் என்பது தான் புரியவில்லை. அதனால் தானோ என்னவோ பிள்ளைகள் வேலைக்குச் செல்லும் நேரம் வரும்போது பெற்றவர்களை தனியே விட்டு விட்டு தூர தேசங்களுக்கு வேலைக்குச் சென்றுவிடுகிறார்கள்.

பெற்றோர்களே சிந்திப்பீர்! நம் ஊர்ப் பள்ளிகளிலேயே குழந்தைகளை சேர்ப்பீர்!!

– நல்லாசிரியை **ஞா.ரெஜினாள் மேரி,** பொற்பை

# குறைகள் நீக்கி நிறைவைத் தரும்

# திருக்கல்யாணத்தாய்



உலகில் பெண்ணாகப் பிறந்தவர்களில் முதல் மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரியவர் அன்னை மரியாள். அன்னை மரியாள் மீது நாம் கொண்டுள்ள பக்திக்கும் அன்புக்கும், மரியாதைக்கும், வணக்கத்திற்கும் அடையாளமாக நம் திருக்கல்யாண மாதா ஆலயம் திருத்தலமாக மாறியுள்ள வேளையில் நம் அன்னையை நம்பி வரும் பக்தர்களுக்கு அவள் எப்படியெல்லாம் அருள்பாலிக்கிறார் என்பதைத் தெரிவோம்.

இறைவன் மீட்புத் திட்டத்தில் படைப்பின் போதும் பெந்தகோஸ்து நாளிலும் மரியன்னை மீது எழுந்து வந்த தூய ஆவி ஆண்டவர் உம்முடனே என பெண்களுக்குள் பேறு பெற்ற அன்னை மரியன்னை மூலம் நம்மோடு பேசுகிறார். அருளுக்கு மேல் அருளைப் பொழிபவர் தான் நம் அன்புத் தாய் திருக்கல்யாணத் தாய். இன்றைய சூழலில் என் கடன் பிரச்சனை தீராதா? எனக்குத் திருமணம் நடைபெறுமா? குழந்தை பாக்கியம் கிடைக்குமா? என் நோய் தீருமா? என் பிரச்சனை தீருமா? இந்நிலை மாறாதா? என ஏங்கித் தவிக்கின்றீர்களா.... குறைகளை நீக்கி நிறைவைத் தரும் திருக்கல்யாண மாதாவை தரிசியுங்கள். முடியாத காரியங்களையும் நம் சூழ்நிலைகளையும் தலைகீழாக மாற்றக் கூடிய தாய் நம் அற்புதத் தாய். (ஏசாயா 53:) அவர் நம் பாடுகளை ஆக்கினையை தண்டனையை, நம் துக்கங்களையும் சிலுவையில் சுமந்து தீர்த்தார். அந்த இயேசுவின் தாய் தான் கல்யாணத் தாய்.

1.கசப்பு இனிப்பாக மாறியது. (யாத்.15-25)

இஸ்ரேயல் மக்கள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடைக்காமல் மோயீசனிடம் முறுமுறுத்த போது ஆண்டவர் மோயீசனுக்கு ஒரு மரத்தைக் காண்பித்து அதை மாராவின் கசப்புத் தண்ணீரில் போட்டவுடன் அது இனிப்பாக மாறியது. வாழ்க்கையில் வரும் கசப்பு, வெறுப்பு, விரக்தி, துன்ப, துயரங்கள் பிரச்சனைகளை நீக்குகின்ற அந்த மதுரமான இயேசுவின் தாய் நம் திருக்கல்யாணத் தாய். இறைவனை விட்டு விலகிய நவோமி தன் தவறை உணர்ந்து கடவுளிடம் திரும்பும் போது அவள் வாழ்க்கை மதுரமாக மாறியது. எசேக்கியேல் ராஜா நோய்வாய்பட்டு கசப்போடு வாழ்ந்தவர். (ஏசா.38:15) ஆண்டவர் அவரை குணமாக்கினார். கசப்பு மாறி இனிப்பானது. உங்கள் வாழ்வில் கசப்புகளா? வியாதியினால் அன்பு கிடைக்காமல் புறக்கணிக்கப்படுகிறீர்களா? அன்னையிடம் வாருங்கள். கசப்புகள் மதுரமாக மாறும்.

2.தீமை நன்மையாக மாறும் (ஆதி.50:20)

யோசேப்பு தன் சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டு அந்நியரிடம் விற்கப்பட்டு சிறையில் கிடந்தவன். அவன் வாழ்வில் பட்ட கஷ்ட, நஷ்டங்களுக்கு அளவே இல்லை. தீமைகள் நடுவிலும் அவன் பொறுமையாயிருந்தான். யாரும் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்தான். இறைவன் அவனை உயர்த்தினார். கலங்காதிருங்கள். அன்னையிடம் வாருங்கள். உங்கள் தீமைகள் நன்மைகளாக மாறும்.

-R. மெர்ஸி அமலி, சென்னை



# குட்டீஸ் கார்னர்

ஹலோ குட்டீஸ், போன மாதம் புது ஸ்கூல் டீச்சர், ஸ்கூல் ஃபிரண்ட்ஸ் எல்லோரையும் பார்த்திருப்பீங்க... எல்லோரிடமும் அன்பாகவும், உண்மையாகவும் பழகணும். அப்புறம் படிப்புல அதிக கவனம் செலுத்துங்க... போன வருடத்தை விட இந்த வருடம் அதிக மார்க் வாங்கணும் என்ன...!? ஒய்வு நேரங்களில் இந்த புதிர் விளையாட்டுகள் ரொம்ப ரிலாக்ஸாக இருக்குதுன்னு நிறைய குட்டீஸ் சொன்னதால இந்த மாதமும் உங்களுக்காக இரண்டு புதிர் விளையாட்டுக்கள் இருக்கு சரியா?

ஓகே! ஸீ யூ... பை.. பை...டேக் கேர்...

- M.எல்ரோய் ராயன், மும்பை






ஹாய் குட்டீஸ்,

இங்கே இருக்கும் இந்த இரண்டு படத்திற்குமிடையே எத்தனை வித்தியாசங்கள் இருக்கிறது என்று இந்த தடவையும் சொல்ல மாட்டேன். உங்கள் திறமையை மதிப்பெண்ணிட்டு நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

12 வித்தியாசங்கள்............. 100
10 வித்தியாசங்களுக்கு மேல்......... 75
6 வித்தியாசங்களுக்கு மேல்......... 50
5 வித்தியாசங்கள்.............. !!??




வேறென்ன?
ஃபெயிலுதான்....



பசியால் வாடிப்போயிருக்கும் இந்த குட்டி எலிக்கு சாப்பிடுவதற்கு உள்ளே உள்ள ஆப்பிளை எடுக்க வழி காட்டி உதவுவீர்களா......? குட்டீஸ்

# ஹெல்த் கார்னர்



## பெருங்காயத்தின் பெருங்குணங்கள்

- பெருங்காயத்தை நீரில் இழைத்து வயிற்றின் மீது பற்றுப் போட்டு வந்தால் வயிற்றுப் பொருமல் நீங்கும்.
- பெருங்காயம் கசப்பு சுவை உடையதாக இருந்தாலும், இதனை உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது. இதன் பயனாக அஜீரணம், வாத குடைச்சல், நாக்குப்பூச்சி பிரச்சனைகள் மற்றும் பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் சிக்கல்கள் குணமாகும்.
- சீரகத்தூள் ஒரு ஸ்பூன், பெருங்காயத்தூள் அரை ஸ்பூன் இரண்டையும் கலந்து பனை வெல்லத்துடன் சேர்த்து சாப்பிட்டால் அஜீரணத்துடன் கூடிய ஏப்பம் நின்றுவிடும்.
- மோரில் சிறிதளவு பெருங்காயத்தை கலந்து குடித்தால் நன்கு ஏப்பம் வரும். வாயுவை வெளியேற்றி வயிற்று உப்புசத்தை குணமாக்கும்.
- சுக்கு, பெருங்காயம், சமஅளவு எடுத்து பால்விட்டு நன்கு மைபோல் அரைத்து வீக்கம் உள்ள மூட்டுகளின் மீது பற்று போட்டால் வீக்கமும், வலியும் தீரும்.
- வேப்பிலையுடன் பெருங்காயத்தை சேர்த்து நன்கு அரைத்து ஆறாத புண்களின் மீது பூசிவர உடனே ஆறும்.
- பெருங்காயம், ஓமம், சீரகம், இந்துப்பு, திரிகடுகு, கருஞ்சீரகம் இவை அனைத்தையும் சம அளவு எடுத்து சூரணம் செய்து கொள்ளவும். அதில் சுண்டைக்காய் அளவுக்கு எடுத்து அதை தேன் அல்லது நெய்யில் கலந்து சாப்பிட எப்படிப்பட்ட வாய்வுத் தொந்தரவும் நீங்கிவிடும்.

– சித்தமருத்துவர் **த.உதயதாரகை,** கடலூர்.

## கருணைக்கடல்



கேட்கின்ற வரங்களை வாரி வழங்கும்
கருணைக்கடலாம் திருக்கல்யாணத் தாயே!
நீர் எங்கள் வாழ்வில் இருப்பதால் துன்பம் தெரிவதில்லை!
உம்மை பிரிந்தால் எங்கள் வாழ்வில் இன்பம் தெரிவதில்லை!
விண்ணில் பல நட்சத்திரங்கள் இருந்தாலும்
வானுக்கு அழகு நிலா தான் – அதுபோல
மண்ணில் பல உறவுகள் இருந்தாலும் எங்கள்
வாழ்விற்கு அழகு உமது ஆசீர் தானே!

– **டே. நிஜிதா,** வெள்ளக்கோவில்




# கிச்சன் கார்னர்

## வெஜிடபிள் நூடுல்ஸ்

**தேவையான பொருட்கள் :**
நூடுல்ஸ் – 2 பாக்கெட், கேரட் – 1, பீன்ஸ் – 5, கோஸ் – சிறிதளவு, பெரிய வெங்காயம், குடமிளகாய் – 1, பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு தேவையான அளவு, சோயா சாஸ், கார்ன் பிளவர் தலா 1 தேக்கரண்டி, சர்க்கரை அரை தேக்கரண்டி,மிளகுத் தூள் 1 தேக்கரண்டி, உப்பு, எண்ணெய் தேவையான அளவு.

**செய்முறை :**
முதலில் எல்லா காய்கறிகளையும் நீள வாக்கில் வெட்டி, அரைவேக்காட்டில் வேக வைத்து எடுத்துக்கொள்ளவும். பின்பு நூடுல்ஸை கொதிக்கும் நீரில் 2 நிமிடம் வேக வைத்து, நீரை வடிகட்டி விட்டு பச்சைத் தண்ணீரில் அலசி விட்டு சிறிது நேரம் உலர விடவும். வாணலியில் தேவையான அளவு எண்ணையை ஊற்றி எண்ணை சூடானதும் பச்சை மிளகாயை போட்டு வதக்கவும். சிறிது நேரம் கழித்து வெங்காயம், இஞ்சி, பூண்டு, காய்கறிகளையும் சேர்த்து வதக்கவேண்டும். வெந்ததும் அத்துடன் உப்பு, சோயா சாஸ், சர்க்கரை சேர்த்து நன்றாக கிளறி விடவும். அதன்பின் நூடுல்ஸ், மிளகுத்தூள், கார்ன் பிளாவரை தூவி மெதுவாக கிளறி விடவும். 2 நிமிடம் கிளறிய பின் வாணலியை இறக்கி வைக்கவும். சூடான வெஜிடபிள் நூடுல்ஸ் தயார்.



பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு காலை உணவாகவும், மாலை சிற்றுண்டியாகவும் கொடுப்பதற்கு ஏற்ற உணவு இது. தயாரிப்பும், செலவும் மிக எளிது. வீட்டுக்கு வரும் திடீர் விருந்தாளிகளை சாமாளிக்கவும் இது உதவும்.

– காவை **நீல வண்ணன்.**

## சிந்தனைக் குறிப்புகள்

- குறுக்கு வழியில் வெற்றி பெறுவதை விட கௌரவத்துடன் தோற்பது சிறப்பு.
- திட்டமிட்டு செயல்பட்டால்தான் வெற்றியைப் பெற முடியும்.
- துணிவுள்ளவன் பயத்தை வென்று வெற்றியை அடைவான்.
- மற்றவர்களின் வெற்றியைப் பார்த்து மனதில் பொறாமைப்படுபவன் வெளியில் நண்பனைப் போல் வேடமிடுவான்.
- ஒருவனை எப்படித் தாழ்த்தலாம் என யோசிப்பவன் அதையும் மீறி அவன் உயர்ந்து விட்டால் திறமைசாலி என பாராட்டுவான்.
- கோபத்தை அடக்குவது சரியல்ல கோப உணர்வு வராமலிருக்க மனதைப் பக்குவப்படுத்துவதே சரி.
- இளமையில் சேமிப்பு செய்யாதவர்கள் முதுமையில் அவதிப்படுவார்கள்.
- தவறை மன்னிக்கும் போது பிறரை நாம் வெல்கிறோம்.

– **K.அலெக்ஸியா,** கொச்சி

# உங்களுக்குத் தெரியுமா...?

★ அமெரிசியம் என்ற கதிரியக்கம் கொண்ட தனிமம், 1944ம் ஆண்டு சீபோர்க் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

★ அந்துருண்டை என்பது பூச்சிகளிடமிருந்தும் பூஞ்சைகளிடமிருந்தும் உடுப்புகளைப் பாதுகாக்கப் பயன்படும் ஒரு வேதிப் பூச்சிக்கொல்லியும் வாசனைத் திரவியமும் ஆகும்.

★ கடல் முள்ளி உடலெங்கும் முட்களாலான கோள வடிவ அடைத்த தோலாலான விலங்காகும்.

★ எலியாஸ் ஓவே தையல் இயந்திரத்தைக் கண்டறிந்து, நவீன தையல் இயந்திரத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஓர் அமெரிக்க கண்டுபிடிப்பாளராவார்.

★ ஒரே செடியில் பல வண்ண மலர்கள் பூக்கும் அந்திமந்தாரை என்ற மலர் பொழுது சாயும் நேரம் மலரும் ஒரு வகை மலராகும்.

★ ஆகாய கங்கை அருவி இந்தியாவின் தென் மாநிலமான தமிழ்நாட்டில் நாமக்கல்லுக்கு அருகில் உள்ள கொல்லிமலையில் அமைந்துள்ளது.

★ இந்தியாவின் ஏவுகணையான ஆகாஷ் ஏவுகணை எண்ணெய்க் கிணறுகள் பரவிய பெரும் பரப்பளவை எதிரிகள் தாக்கும்போது எதிர்த்தடிக்கப் பயன்படுகிறது.

★ இளநீரில் தாவர வளர் ஊக்கிகளில் ஒரு வகையான ஆக்ஸிஜன் உட்பட பல செடி வளர் ஊக்கிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

★ சென்னையின் ஒரு பகுதியான பாரிமுனை தாமஸ் பாரி என்ற வேல்ஸ் நாட்டு வணிகரின் பெயரை வைத்தே வழங்கப்படுகிறது.


–நன்றி : ஞாயிறு மலர்

# உலகிலேயே பரப்பளவில் சிறிய நாடுகள்

| | |
|---|---|
| வாடிகான் நகரம் | – 0.44 சதுர.கி.மீ |
| மொனார்க்கோ (ஐரோப்பா) | – 1.95 சதுர கி.மீ |
| மக்காவி (ஆசியா) | – 15.50 ச.கி.மீ |
| நவுரு (தெற்கு பசிபிக்) | – 21.30 ச.கி.மீ |
| துவது (தெற்கு பசிபிக்) | – 26 ச.கி.மீ |
| பெர்முடா (வட அட்லாண்டிக்) | – 53.20 ச.கி.மீ |
| சான்மரீனோ (ஐரோப்பா) | – 61 ச.கி.மீ |
| மான்ட்செரட் (கரீபியன்) | – 102 ச.கி.மீ |

**– ஏஞ்சல் ஸ்வீட்டன், திசை.**

# இனியவை இருபது



1. கடமைகளை ஏற்றுக்கொள்.
2. வெற்றி நிச்சயம் என்றே நினைவில் கொள்.
3. வார்த்தைகளை வகையறிந்து பேசு.
4. இறைவணக்கம் செய்ய தவறிவிடாதே.
5. புன்னகையால் முகத்தை போர்த்திக்கொள்.
6. அடுத்தவரை அநியாயமாக எண்ணாதிரு.
7. கற்கும் போது சிறந்த கவனிப்பாளராக இரு.



8. உற்சாகத்தை உன்னைவிட்டு விலகவிடாதே.
9. பிறரை பாராட்டும்போது கஞ்சத்தனம் செய்யாதே.
10. ஒப்புக்கொள்ள மறுக்காதே, நீ தவறுசெய்யும் போதும்.
11. உனக்குத் தெரிந்ததை உலகிற்கு தெரிவி.
12. நன்றி எதிர்பாராத பெருந்தன்மையோடு இரு.
13. பிறரைச் சார்ந்திருக்கும்போது நன்றி மறவாதே.



14. பணிவு, அடக்கம் இரண்டையும் விட்டுவிடாதே.
15. உள்ளத்தில் கனிவோடு இருக்க கற்றுக்கொள்.
16. நகைச்சுவை உணர்வை மறந்துவிடாதே.
17. மன்னித்து ஏற்க பகைமையை மறந்துவிடு.
18. செயல்பாடுகளில் உண்மை, நேர்மை மிளிரட்டும்.
19. நண்பனுக்கு நல்ல நண்பனாக இரு.
20. சுடுசொற்களை நாவில் கொண்டுவராதிரு.

– ஜெயந்தி மனோ

# டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்...

அரிவாள்மனை, தேங்காய்துருவி, காய்கறி நறுக்கப்பயன்படும் கத்தி போன்றவைகளில் உள்ள துருவைப் போக்க இவற்றின் மீது ஒரு சீமை வெங்காயத்தை நறுக்கித் தேய்த்தால் துரு இருந்த இடம் தெரியாமல் போகும்.

துணிகளில் உள்ள எண்ணெய் கறை நீங்க கோதுமை மாவை கறைபட்ட இடத்தில் தண்ணீரில் கரைத்துப்பூசி வைத்து அரைமணி நேரம் கழித்து அலசினால் கறை நீங்கிவிடும்.

சமையல் அறையில் உள்ள எண்ணெய் பிசுபிசுக்கை போக்க மண்ணெண்ணெயைப் பிசுக்கு உள்ள இடங்களில் பரவலாக பூசி 15 நிமிடங்கள் கழித்து மெல்லிய துணியால் துடைக்கப் பிசுக்கு இருந்த இடம் தெரியாது.

அரிசி பருப்பு மற்றும் தானிய வகைகளை போட்டு வைக்கும் டின்களில் அல்லது பாத்திரங்களில் காய்ந்த வேப்பங்குச்சிகளை போட்டு வைத்தால் புழு, பூச்சிகள் அண்டாது.

– **லெவிற்றா விக்டோரியா,** பட்டணம்.



## வரவேற்கிறோம்



இறையாசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை
அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்.

29.10.12 ஜோவின்ஷா மேரி பெலிக்ஸ் அந்தோணி
ஜோஸ் வென்சி ராணி பொற்பை

---

புகழ் பெற்ற இந்தியர்கள் :

# கோபால கிருஷ்ண கோகலே




1866-ம் ஆண்டு மகராஷ்டிராவவில் ஒரு ஏழைக் குடும்பதில் பிறந்த இவர் இருபது வயதிலேயே பேராசிரியர் பதவி வகித்தார். மும்பை ஃபெர்குஸன் கல்லூரியைத் தோற்றுவித்தவர்களில் இவர் முக்கியமானவர். ரானடேயின் தொடர்பு ஏற்பட்ட பிறகு அரசியலில் ஈடுபட்டார். 1896-ல் லண்டன் சென்று வந்தார். 1899-ல் பம்பாய் கவுன்சில் உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். 1902-ல் கல்லூரிப் பணியை விட்டு விலகித் தம்மை பொது ஜன சேவையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

மத்திய சட்டசபையில் இடம் பெற்று மக்கள் உரிமைகளுக்காக வாதாடினார். 1905-ல் இந்திய ஊழியர் சங்கத்தை தொடங்கினார். இது இளைஞர்களுக்குப் பொது ஜன சேவைக்குப் பயிற்சியளித்தது. இருமுறை இங்கிலாந்து சென்று இந்திய மக்களின் கோரிக்கைகள் பற்றி பல இடங்களில் சொற்பொழிவாற்றினார். 1912ல் தென்ஆப்ரிக்கா சென்று அங்கு வாழும் இந்தியர்களின் நிலைமையைக் கண்டு வந்தார். மகாத்மாவின் பெருமதிப்பு பெற்றிருந்த இவர், தாய் நாட்டுக்கு ஆரவாரமின்றி அடக்கமாக பணியாற்றி 1915-ல் மறைந்தார். இந்திய தேச பக்தர்களிடையே கோகலேவுக்கு எப்போதும் சிறப்பான இடம் இருந்து வந்திருக்கிறது.

-புகழ் பெற்ற இந்தியர்கள்

---

## இதய அஞ்சலி

25.06.12 பாக்கியராணி பொற்பை

# நற்கருணை புதுமை!

கி.பி. 1453ம் ஆண்டு ஜுன் மாதம் 6ம் தேதி டூரின் நகரைச் சேர்ந்த இரண்டு இராணுவ வீரர்கள் விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்தனர். இவர்கள் இறைபக்தி அற்றவர்கள். தெய்வபயம் இல்லாதவர்கள் எனவே எக்சைல்ஸ் என்ற நகரை கடக்கும்போது அங்கே ஒரு தேவாயலத்தைக் கண்டார்கள். அவர்கள் இருவரும் ஒருமனப்பட்டு அந்த ஆலயத்தில் செபிப்பதற்கு பதிலாக அங்கிருருந்த பொருட்களை திருட நினைத்தார்கள்.




அவர்கள் திட்டமிட்டபடியே எல்லா பொருள்களையும் திருடினார்கள். நற்கருணை பெட்டியையும் உடைத்து நற்கருணையையும் திருடி மூட்டை கட்டி கழுதைமேல் ஏற்றிக்கொண்டு டூரின் நகருக்கு வந்தார்கள். கழுதையோ டூரின் நகர எல்லையிலே நின்று கொண்டு நகர மறுத்தது. மூட்டை தானே அவிழந்தது. பொருட்கள் எல்லாம் தரையில் விழுந்தன. ஆனால் என்ன ஆச்சரியம்! என்றால் அதிலிருந்த நற்கருணை மட்டும் கீழே விழாமல் மேலே எழுந்து ஒளி வீசிக் கொண்டிருந்தது. இது நடந்த இடம் கிறிஸ்துவின் திருஉடல் பேராலயத்திற்கு அருகில் தான் உள்ளது.

இந்த செய்தி டூரின் நகர ஆயரான லூடோவிகோ என்பவருக்கு தெரிவிக்கப்பட்டது. ஆயரும் கேள்விப்பட்டதை காண விரைந்து நகரின் எல்லைக்கு வந்து பார்த்தார். நற்கருணை உயர்ந்து ஒளிவீசிக் கொண்டிருந்தது. எனவே ஆயர் நற்கருணை பாத்திரத்தை கொண்டுவரச் செய்து மக்களுடன் இணைந்து உருக்கமாக செபித்தார். உயர்ந்து நின்று ஒளிவீசிக் கொண்டிருந்த நற்கருணை நாதர் ஆயர் பிடித்திருந்த நற்கருணைப் பாத்திரத்தில் இறங்கினார்.

ஆயரும் மக்களும் பவனியாக இந்த நற்கருணையை திருமுழுக்கு யோவான் பேராலயத்திற்கு எடுத்துச் சென்று ஆராதித்தார்கள். இதே நற்கருணை நாதர் உங்கள் ஆலயங்களிலும் இருக்கிறார். நம் உள்ளத்தில் உணவாக வருகின்றார். ஆகவே நற்கருணை உட்கொண்ட பின் நமக்கும் இருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை வணங்கி ஆராதித்து அவரோடு பேசுவோம். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நற்கருணையை சந்திப்போம். வணங்குவோம். நாம் கையிட்டு செய்யும் எல்லா வேலைகளையும் அவர் நிறைவாக ஆசீர்வதிப்பார். ஆமென்.

– நன்றி : தெய்வீகக்குரல்

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1.மணமகன் 5. ஏழைகள் 9. கருஞ்சிவப்பு 13. அதிகாரம் 17. பேதுரு 21. அபியா 25. மாட்சி

**வலமிருந்து இடம் :** 2. எண்ணெய் 6. மனம் 10. அரிமத்தியா 14. அல்பேயு 18. மூலைக்கல் 22. அடிமை 26. சிமியோன்

**மேலிருந்து கீழ் :** 7.மேலுடை 11. அந்திரேயா 15. மருத்துவர் 19. கடவுள் 23. காதில்

**கீழிலிருந்து மேல் :** 3.கயபா 4. பெத்தானியா 8. குயவன் 12. செபதேயு 16. எப்பத்தா 20. உடல் 24. பாலை.

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

கவரப்பேட்டை – **D.ஜோஸ்பின் மேரிதாசன் A.அன்னபுஷ்பம் ராஜன் S.டோமினிக் பெனிட்டா அகஸ்டின் அனுஷா S.சுரேஷ் கீதா**

மாதர்பாக்கம் – **P. ஸ்டெல்லா பீற்றர்,** மாமண்டூர் – **அ.அருள்தெரஸ் சாலினி**

பொத்தக்காலன்விளை – **M.கிறிஸ்டோபர் M.அமலசிறுமலர் M.ரோஸ்பாத்திமா மேரி A. ரோஷினி சகாய டாப்னி M.சகாயவளர்மதி M.செல்வமேரி J.ஆன்சி மேஹா J.நிகிதா ரன் A. மேரி ஷாலினி மேரி லைலா G.ரெஜினாள் மேரி, கபிரியேல் மேரி குயின் ரோஸ் பாக்கியம் S.ஜோஸ்லின் அ.மரிய அற்புத கவிதா D. அந்தோனி ஏசுதாசன் S.மேரி லீலா** கொழுந்தட்டு – **A. கரோலின் சிறுமலர்** மார்க்கம்பட்டி – **P.நிர்மலா சந்தியாகுராஜன், S.டிவாஸ்** சென்னை – **J. பீற்றர் ஜோசப்**

## கவர்னர் ஜெனரல்கள் (1773 – 1858)

★ வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்.

★ இந்திய சிவில் சர்வீஸின் தந்தை : காரன் வாலிஸ்

★ உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழித்தவர் : வில்லியம் பெண்டிங்

★ இந்திய தண்டனைச் சட்டம் மெக்காலே என்பவரால் எழுதப்பட்டது.

★ இந்த மெக்காலே திட்டத்தின்படி பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்சி மொழியானது.

★ வில்லியம் பெண்டிங் காலத்தில் தாஜ்மஹாலை இடிக்க முடிவு செய்யப்பட்டு பின்பு அது கைவிடப்பட்டது.

★ டல்ஹவுசி இந்தியாவில் முதல் ரயில் போக்குவரத்தை1853ல் (மும்பை – தானே) தொடங்கிவைத்தார்.

★ டல்ஹவுசி காலத்தில் முதல் அஞ்சல்தலை கராச்சியில் 1852ல் வெளியானது.


★ விதவை மறுமணச் சட்டம் டல்ஹவுசி காலத்தில் கொண்டுவரப்பட்டது.

★ டல்ஹவுசி காலத்தில் தான் கல்விக்கான சார்லஸ்வுட் அறிக்கை வெளியானது.

– நன்றி : கையளவு களஞ்சியம்

# வாழ்வு தரும் வார்த்தைகள் – ஜூலை – 2013

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | | தொ.நூ. 18:16-33 | மத். 8:18-22 |
| 2. | | தொ.நூ. 19:15-29 | மத். 8:23-27 |
| 3. | புனித தோமா | எபே.2:19-22 | யோவா. 20:24-29 |
| 4. | புனித எலிசபெத் | தொ.நூ.22:1b-19 | மத். 9:1-8 |
| 5. | புனித அந்தோனி | தொ.நூ23:1-4,19 | |
| | மரி சக்கரியா | 24:1-8, 62-67 | மத். 9:9-13 |
| 6. | புனித மரிய கொரற்றி | தொ.நூ 27:1-5,15-29 | மத். 9:14-17 |
| 7. | ஆண்டின் ஞாயிறு -14 | எசா.66:10-14c | |
| | | கலா. 6:14-18 | லூக். 10:1-12,17-20 |
| 8. | புனித அக்யுல்லா, பிரிசில்லா | தொ.நூ 28:10-22a | மத். 9:18-26 |
| 9. | | தொ.நூ. 32:23-33 | மத். 9:32-38 |
| 10. | | தொ.நூ 41:55-57 | |
| | | 42:5-7a 17-24a | மத். 10:1-7 |
| 11. | புனித பெனடிக்ட் | தொ.நூ 44:18-21 | |
| | | 23b-29, 45:1-5 | மத். 10:7-15 |
| 12. | புனித யோவான் குவால்பெர்ட் | தொ.நூ 46:1-7,28-30 | மத். 10:16-23 |
| 13. | புனித இரண்டாம்ஹென்றி | தொ.நூ 49:29-32 | |
| | | 50:15-26a | மத். 10:24-33 |
| 14. | ஆண்டின் ஞாயிறு -15 | இச.30:10-14 | |
| | | கொலோ 1:15-20 | லூக். 10:25-37 |
| 15. | புனித பொனவெந்தூர் | வி.ப 1:8-14,22 | மத். 10:34,11:1 |
| 16. | புனித கார்மேல் அன்னை | வி.ப 2:1-15a | மத். 11:20-24 |
| 17. | புனித நான்காம் லியோ | வி.ப. 3:1-6,9-12 | மத் 11:25-27 |
| 18. | புனித கமிலஸ் | வி.ப. 3:13-20 | மத். 11:28-30 |
| 19. | | வி.ப. 11:10-12:14 | மத். 12:1-8 |
| 20. | | வி.ப. 12:37-42 | மத். 12:14-21 |
| 21. | ஆண்டின் ஞாயிறு - 16 | தொ.நூ 18:1-10a | |
| | | கொலோ 1:24-28 | லூக். 10:38-42 |
| 22. | புனித மதலேன் மரியாள் | வி.ப. 14:5-18 | யோவா 20:1-2,11-18 |
| 23. | புனித பிரிஜத் | வி.ப. 14:21-15:1 | மத். 12:46-50 |
| 24. | | வி.ப. 16:1-5,9-15 | மத். 13:1-9 |
| 25 | புனித யாக்கோபு | 2 கொரி. 4:7-15 | மத். 20:20-28 |
| 26 | புனித சுவக்கீன், அன்னாள் | வி.ப. 20:1-17 | மத். 13:18-23 |
| 27 | புனித பந்திலேயோன் | வி.ப. 24:3-8 | மத். 13:24-30 |
| 28. | ஆண்டின் ஞாயிறு -17 | தொ.நூ 18:20-32 | |
| | | கொலோ 1:24-28 | லூக். 10:38-42 |
| 29. | புனித மார்த்தா | வி.ப. 32:15-24 30-34 | யோவா 11:19-27 |
| 30 | புனித கிரசலோகு பேதுரு | வி.ப. 33:7-11 34:5b-9,28 | மத் 13:36-43 |
| 31 | புனித லெயோலா இன்னாசி | வி.ப. 34:29-35 | மத். 13:44-46 |




# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

பதில்கள் தேடவேண்டிய பகுதி

லூக்கா : அதிகாரம் 2 முதல் 8 வரை

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.07.2013

**இடமிருந்து வலம்**

1. அன்னா எக்குலத்தைச் சேர்ந்தவர்?
5. யார் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்?
9. சேலாமின் மகன் யார்?
13. எலியாவின் காலத்தில் எத்தனை ஆண்டுகள் வானம் பொய்த்தது.
17. .....................சூம்பியவர் ஒருவர் இருந்தார்.
21. .....................நிறைவையே வாய் பேசும்.

**வலமிருந்து இடம்**

2. அன்னா அல்லும் பகலும் என்ன செய்து வந்தார்?
6. களஞ்சியத்தில் சேர்க்கப்படுவது எது?
10. ஆதாமின் தந்தை யார்?
14. பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு.............. உண்டு.
18. பட்டினியாய் இருப்பவர்கள் என்ன பெறுவர்.
22. ........................ மெய்யானது

**மேலிருந்து கீழ்**

3. இயேசு யார் நடுவில் அமர்ந்திருந்தார்?
7. இயேசு தம் பணியைத் தொடங்கியபோது அவருக்கு வயது என்ன?
11. அவர் எனக்கு ........................... செய்துள்ளார்.
15. பாவிகளையே ................................அழைக்க வந்தேன்.
19. உங்கள்......................... அன்பு கூருங்கள்.
23. வேறு சில விதைகள் ................................ விழுந்தன.

**கீழிருந்து மேல்**

4. கலிலேயாப் பகுதிக்கு குறுநில மன்னர் யார்?
8. கோசாமின் மகன் யார்?
12. தம் சொந்த ஊரில் யார் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை?
16. ...........................மானிட மகனுக்கு கட்டுப்பட்டதே.
20. மற்றவர்களை ............................ செய்யாதீர்கள்
24. தொழுகைக் கூட தலைவன் யார்?

## திருத்தல வழிபாடுகள்

★ ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 09.30 மணிக்கு செபமாலை , 10.15 மணி முதல் 11.30 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு அதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெறும். மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.00 மணிக்கு நவ நாள் திருப்பலியும் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.

★ மாதத்தில் முதல்செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலை திருப்பலி.

★ மாதத்தில் முதல் புதன் ஆலய கெபியில் மாலை திருப்பலி.

★ மாதத்தில் இரண்டாவது புதன் நான்கு சந்தி கெபியில் மாலை திருப்பலி.

★ மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்.

★ மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

★ மாதத்தின் முதல் சனி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர் நடைபெறும்.

## இணையூர் வழிபாடுகள்

**நவமுதலூர்**

★ வாரம் ஒருமுறை ஞாயிறு திருப்பலி மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலி நடைபெறுகிறது.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி நற்கருணை ஆசீர் |

### அடுத்த இதழ்

**அன்னையின் விண்ணேற்பு பெருவிழா, நமது பாரத நாட்டின் சுதந்திரப் பெருவிழாசிறப்பிதழாக வெளிவரவிருக்கிறது எனவே அது பற்றிய சிறப்புச் செய்திகள், கட்டுரைகள், கதைகள்,** துணுக்குச் செய்திகள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகள் எங்களை வந்து ...

**சேர வேண்டிய கடைசி நாள் : 15.07.2013**

**சந்தாதாரராக ஆகுங்கள் !** **அன்னையின் அருள் பெறுங்கள் !**

